தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987 மார்ச் 26, வியாழக்கிழமை.

பங்குனி 12, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு—2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."

இனிய சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை உதவிக் காக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

உள்ளாட்சி மற்றும் நகராட்சி மன்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.

177—(*வினா எண் 1020) திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மற்றும் நகரியங்களிலும், பேரூராட்சிகளிலும் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற பொழுது வீடு கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறினார்கள். அது இந்த நடப்பு ஆண்டிலாவது மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய ஒரு திட்டம் நடைமுறையிலே உள்ளது. ஆண்டுதோறும் இந்த வீடு கட்டும் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1 கோடி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் பணியாற்றுகிற துப்புரவுப் பணியாளர்களுக்குப் பிரத்தியேகமாக வீடு கட்டுகிற திட்டம் இல்லையென்றாலும்கூட, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகளில் அவர்களுக்கு முன்னுரிமை தந்து வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் தேவை, Mass Housing Scheme 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தில் நிறைவு செய்யப்படும்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்தெந்த நகரங்களில், கிராமங்களில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது; எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அதுபற்றி விவரங்களை அளிக்கப் போனால் அது மிகப் பெரிய பட்டியலாக வரும். ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். 106 நகராட்சிகள் மற்றும் நகரியங்களில் உள்ள சுமார் 11,000 தொழிலாளர்களுக்கு இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று திட்டமிடப்பட்டு 9—4—1985 வரை, 3,796 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1987 மார்ச் 26]

திரு. க. பரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களில் ஏற்கெனவே கட்டி குடியிருந்து வருகின்ற துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் ஓய்வு பெற்ற பின்னாலே அதே வீட்டில் குடியிருக்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கென கட்டப்படுவதால் ஓய்வு பெற்ற பின் அனுமதிப்பதற்கு இடம் இருக்காது.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி போன்ற பெரிய நகரங்களில் துப்புரவுத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் இப்போது 10, 15 ஆண்டுகளுக்குப் பின்னாலே, ஒருவித பராமரிப்புப் பணியும இல்லாமல் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. இது குறித்து அரசு கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படிக் கொண்டு வரப்பட்டிருந்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்திற்குத்தான் அரசு உதவி செய்ய முடியும். அதைப் பராமரிப்பது போன்ற பணிகளில் நகராட்சி ஈடுபடுவதே நல்லது.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளிலே துப்புரவுப் பணியாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தும், மின் விளக்கு இல்லாமலும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகராட்சிகள் தான் பராமரிக்க வேண்டுமென்றார். நகராட்சிகள் நிதி ஆதாரம் இல்லையென்று சொல்கின்ற காரணத்தாலே, தனியாக மானியம் கொடுத்து—விருதுநகர் போன்ற நகரங்களிலே அதிகமான வீடுகள் இடிந்து போயிருக்கின்றன—அவற்றிற்கு ஒரு நிவாரணம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிதி ஆதாரம் இல்லையென்றால் நிதியை நகராட்சிகள் திரட்டிக் கொள்ள வேண்டும்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், பேரூராட்சிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க முழுமையும் மானியமாகவோ இலவசமாகவோ கட்டிக் கொடுக்கப் படுகிறதா அல்லது பாதி மானியத் தொகையில் கட்டிக் கொடுக்கப் படுகிறதா அல்லது நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் எத்தனை சதவீதம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் நாம் தரவேண்டும், அவர்கள் 50 சதவீதம் தரவேண்டும். நகராட்சிகளைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு நிதி ஒதுக்க சிறப்புத் திட்டம்.

178—(*வினா எண் 7998) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வருமான வசதியில்லாமல், அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத நிலையில் உள்ள நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யும் சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் அமல்படுத்த இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானம் இல்லாமல் சம்பளம் கொடுப்பதற்குக் கூட வசதியில்லாமல் இருக்கக்கூடிய நகராட்சிகள், பேரூராட்சிகள் இவைகளுக்கு நிரந்தரமாக வருவாய் வருகின்ற அளவுக்கு சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா?